Translated article: Tamil Murasu
Date published: 24 October 2022

தமிழ் முரசு

# முதியோர்களுக்கு தீபாவளி உணர்வைத் தந்த பாலர்கள்

அனுஷா செல்வமணி



ஸ்ரீ நாராயண மிஷன் பராமரிப்பு நிலையத்துக்கு வந்த கம்போங் கிளாம் பிசிஎஃப் ஸ்பார்க்கல்டாட்ஸ் மாணவர்கள் ஆடி, பாடி, கோலாட்டம் போட்டு முதியோர்களை மகிழ்வித்தனர். **படங்கள்: ஸ்ரீ நாராயண மிஷன்**

கொவிட்–19 நோய்த்தொற்றுச் சம்பவங்கள் மீண்டும் சற்றுக் கூடியிருப்பதால் தாதிமை இல்லங்களில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலமாக இருக்கும் இந்த நேரத்தில் கட்டுப்பாடுகளைக் கருத்தில் வைத்துக் கொண்டு ஸ்ரீ நாராயண மிஷன் தாதிமை இல்லத்தில் குடியிருப்பாளர்களுக்குச் சிறிய அளவிலான தீபாவளி நடவடிக்கை வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது.

நம் பாரம்பரிய கூறுகளில் ஒன்றான கோலமிடுவதை, ஸ்ரீ நாராயண மிஷன்வாசிகள் பூத்தாக்க வடிவில் கோல மாவைப் பயன்படுத்தாமல் தாள்பூக்கலை மூலம் சிறிய குழுக்களாகப் பிரிந்து ஈடுபட்டனர்.

தாள்பூக்கலை என்பது, பல வண்ணங்களில் இருக்கும் காகிதத்தைப் புதிய வடிவங்களில் வெட்டி, அதை நமக்குப் பிடித்த வடிவமைப்புக்கேற்ப அழகாக பசையை வைத்து ஒட்டும் ஒரு கலையாகும்.

வசிப்போர், அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு தொண்டூழியர்கள் அவர்களுக்கு உதவி செய்தனர்.

ஸ்ரீ நாராயண மிஷன் நிலையத்தில் வசிக்கும் 84 வயது திருவாட்டி அடிகள் அம்மா, "நான் நாராயண மிஷனில் தீபாவளி கொண்டாடுவது இதுவே முதல் முறை. நோய்த்தொற்று காலமாக இருந்தாலும் நம் கலாசாரத்தை நினைவூட்டும் வகையில் தீபாவளி நடவடிக்கைகளை நாராயண மிஷன் ஏற்பாடு செய்தது சிறந்த முயற்சியாகும். தீபாவளி உணர்வை இது எங்களுக்கு அளித்துள்ளது," என்றார்.

பண்டிகை உணர்வை கொண்டு சேர்க்கும் வகையில் மற்றொரு முயற்சியாக ஸ்ரீ நாராயண மிஷன் அண்மையில், கம்போங் கிளாம் பிசிஎஃப் ஸ்பார்க்கல்டாட்ஸ் (PCF Sparkle Tots) பாலர் பள்ளியுடன் ஒன்றிணைந்து ஸ்ரீ நாராயண மிஷன் பராமரிப்பு நிலையத்திற்கு வந்து செல்லும் மூத்த குடிமக்களுக்காக தீபாவளி நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது.

சென்ற வியாழக்கிழமை பாலர் பள்ளியில் படிக்கும் 15 இந்திய மாணவிகள் பராமரிப்பு நிலையத்திற்கு வந்து, ஆடல், பாடலுடன் 30 முதியோர்களை விளையாட்டுகளில் ஈடுபடுத்தி, அவர்களை தீபாவளி உற்சாகத்தில் ஆழ்த்தினர். சிறப்பு அம்சமாக சிறுவர்கள் கோலாட்டம் ஆடி அனைவரையும் மகிழ வைத்தனர். அதை கண்டு பிரமித்த மூத்தோர் சிறுவர்களைப் பாராட்டினர்.

சிறுவர்களின் கலைப் படைப்புகளையும் ஆற்றலையும் கண்டு ரசித்த முதியோர்களுக்கு நிகழ்ச்சி இறுதியில் இலவச தீபாவளி பரிசுப் பைகளும் வழங்கப்பட்டன.

சிறுவர்கள், அவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள் என ஒன்று கூடி முதியோர்களின் முகங்களை மலர வைக்க, ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சி, தீபாவளி வருவதற்கு முன்னரே அவர்களிடம் அந்த உணர்வைக் கொண்டு சேர்த்தது.

Email: sanush@sph.com.sg



தீபாவளி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குடியிருப்பாளர்கள். தொண்டூழியர் ஒருவர் உதவி செய்கிறார்.

**Pre-schoolers bring the joy of Deepavali to Seniors at Sree Narayana Mission**

Some restrictions have been imposed on nursing homes as the number of Covid-19 infections continues to rise.

Keeping in view the restrictions during this festive season, a small Deepavali activity was organized for residents at Sree Narayana Mission Nursing Home on Friday, 21st October.

One of our traditional elements is the making of Kolams (rice art pieces), and Sree Narayana Mission residents utilised paper flowers instead of using the traditional materials to form the art pieces in their own small groups.

Papercraft is an art of cutting different colored papers into new shapes and gluing them beautifully according to our favorite designs.

Residents participated in this activity and volunteers helped them.

Sree Narayana Mission 84-year-old resident, Mdm Adigal Amma said, "This is my first Deepavali celebration at Sree Narayana Mission. It is a great initiative by Mission to organize Deepavali activities to remind us of our culture despite the pandemic. It has given us a celebratory mood!"

In another initiative to add to the festive spirit, Sree Narayana Mission recently worked with Kampong Glam PCF SparkleTots (PCF) to organize a Deepavali program for the senior citizens in Sree Narayana Mission Care Centre. Last Thursday, 15 Indian children studying in the pre-school came to the care center and engaged 30 seniors in games with dancing and singing and immersed them in the Deepavali spirit.

As a special feature, the children also danced the Kolatam (a folk dance) for the delight of all.
Awestruck seniors applauded the children. At the end of the program, Deepavali goodie bags were also given to the senior citizens who were impressed by the artistic creations and energy of the children. This program was jointly organized by the children, their parents, and teachers, to bring the vibes of Deepavali to the elderly even before the actual day!

--- End ---